# இராமேஸ்வரம் நகர் மன்றகூட்டம்

## 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் தேதி காலை 11 : 00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்றக் கூட்ட நடவடிக்கை

## முன்னிலை: வே. இராமர் BA.BL.,
## தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர், இராமேஸ்வரம் நகராட்சி

| பொருள் எண் | பொருள்விபரம் | தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வட்டம், இராமேஸ்வரம் நகராட்சிவார்டு எண் 16 கெந்தமாதனபர்வதம் சாலை நிலஅளவை எண் 550/113 இல் 9750 ச.மீ 2.41 ஏக்கர் பரப்பளவுள்ள ஆரம்ப குடியிருப்பு உபயோகப்படுத்த நிலத்தினை ஒப்புதளிக்கப்பட்ட இராமேஸ்வரம் முழுமைத் திட்டத்தில் வணிக உபயோகப்பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்ய அரசாணை வெளியிடப்பட்டது. மேற்காண் விபரத்தினை இராமநாதபுரம் மாவட்ட அரசிதழில் வெளியிடப்படுவதற்கு ஆகும் செலவின தொகை ரூ.2100/—ற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். 400 அனுமதிக்கப்பட்டது. |
| 2 | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் Compact Fluorescent Lamp (CFL)- 1669 எண்ணம், Sodium Vapor Lamp (SVL) – 230 எண்ணம், Metal | தீர்மானம் எண். 401 அனுமதிக்கப்பட்டது. |

Halide Lamp (MHL) – **50** எண்ணம், Light Emitting Diode (LED)விளக்குகள்– **83** எண்ணம், ஆக மொத்தம் சுமார் **2032** தெருமின் விளக்குகளும், உயர்மின் கோபுர விளக்குகள் **– 22** எண்ணம் மற்றும் தெருமின் விளக்கு தானியங்கி சுவிட்சுகள் **– 136** எண்ணம் உள்ளன. மேற்காணும் தெருமின் விளக்குகள் மழை, காற்று மற்றும் கடல் காற்றின் ஈரப்பதம் ஆகியவற்றினால் தெருமின் விளக்குகள் அடிக்கடி பழுதடைகின்றன. குறிப்பாக இராமேஸ்வரம் கடல் நீர் உப்புத்தன்மையானது. இதனால் இராமேஸ்வரம் பகுதியில் வீசும் காற்றில் உப்புத்தன்மை அதிகமாக இருப்பதால் அடிக்கடி தெருமின் சாதனப் பொருட்கள் மற்றும் தெருமின் உதிரிபாகங்களான பல்புகள், சோக்குகள், இக்னோட்டர்கள் மற்றும் ஹோல்டர்கள் அடிக்கடி பழுதடைகின்றன. இதனால் நகரில் தெருவிளக்குகள் பராமரித்திட மிகவும் சிரமமான சூழ்நிலையாக உள்ளது.

மேலும் தெருவிளக்கு பராமரிப்பிற்கு தேவையான தெருமின் விளக்கு சாதனங்கள் மற்றும் உதிரிபாகங்கள் நமது அலுவலக கிடங்கில் மிகமிக குறைவான அளவில் உள்ளது. இதனால் தெருவிளக்கு பராமரிப்பில் தொய்வு ஏற்பட்டு பொதுமக்களின் பாதிப்புக்குள்ளாகும் சூழ்நிலையாகிறது. ஏனவே பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதியும், தெருமின் விளக்குகளை சரிவர பராமரித்திடவும் கீழ்காணும் தெருமின் விளக்கு உதிரிபாகங்கள் தேவைப்படுகின்றது அதன் விவரம் பின்வருமாறு.

1. 36W CFL பல்புகள் - 250 எண்ணம்
2. 36W CFL எலக்ட்ரானிக் சோக்குகள் - 350 எண்ணம்
3. 250W சோடியம் ஆவிவிளக்குகள் - 50 எண்ணம்
4. 250W சோடியம் ஆவிவிளக்குசோக்குகள் - 50 எண்ணம்
5. 400W மெட்டல்ஹாலிடேவிளக்குகள் - 25 எண்ணம்
6. 400W மெட்டல்ஹாலிடேசோக்குகள் - 25 எண்ணம்

| | | |
|---|---|---|
| | 7. (250W & 400 W) இக்னேட்டர் - 50எண்ணம்<br>8. (250W & 400 W) ஹோல்டர் - 30எண்ணம்<br>9. 1/18 ப்ளக்ஸ் காப்பர் வயர் காயல் - 6எண்ணம்<br><br>மேற்காணும் தெருமின் விளக்கு சாதனங்கள் மற்றும் தெருமின் விளக்கு உதிரிபாகங்கள் வாங்கி கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. **3,90,000/–** மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>(1) அனுமதிக்கலாம். வருவாய் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.<br>**(2)** பொதுமக்களின் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டும், அவசர அவசியம் கருதியும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டும் மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **3** | இராமேஸ்வரம் நகராட்சிக்குள் நுழையும் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் பேருந்து நிலைய நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிம குத்தகை காலம் **19–10–2020**ம் அன்றுடன் முடிவடைவதால், அடுத்து வரும் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோர வேண்டியுள்ளது அதன் பொருட்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அதனை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் மற்றும் இதர செலவுத் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மானம் எண். 402 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோரவும் மற்றும் செலவு தொகைக்கு அனுமதிக்கலாம். | |

ஆணையாளர்/தனிஅலுவலர்,
இராமேஸ்வரம் நகராட்சி.